# பிள்ளை பெருமாள் ஐயங்காரின் அந்தாதி படைப்புகள்
# Anthadi works of Pillai Perumal Iyengar

**A.THENMALAR**
Reg No- 21113154022026, RESEARCH SCHOLAR, DEPARTMENT OF TAMIL, S.T.HINDU COLLEGE, NAGERCOIL-02, MANONMANIAM SUNDARANAR UNIVERSITY,TIRUNELVELI-12, Gmail- thenmalar1008@gmail.com
ORCiD NO– https://orcid.org/0009-0009-0920-5321
**DR.R.N.SREEKALA**
ASSISTANTPROFESSOR, DEPARTMENT OF TAMIL, S.T.HINDUCOLLEGE, NAGERCOIL-02, MANONMANIAM SUNDARANAR UNIVERSITY, TIRUNELVELI-12, Gmail- Sreeshakthi.1974@gmail.com
ORCiD NO – https://orcid.org/0000-0002-1286-571X

**ABSTRACT**

Our mother tongue Tamil is the language nurtured by Adisiva who runs the world. Hence it is understood as the language of God. And language is a form of grammar that a man never learns in his lifetime. Such a grammatical form was brought to life by Tamil literature. Accordingly, the literature sung by the devotees who sing with devotion to the Lord becomes beautiful and shines. Pillai Perumal Iyengar, one of the Vaishnava servants who was possessed by Thirumal, the Karmega vanna, with the form of Antadi, one of Tamil's small literary genres. The purpose of this article is to examine his works sung in the Tamil language using the Anthadi Seyul form and the Tirumal form.

**KEYWORDS**
Pillai Perumal Ayyangar, Vainavam, Anthathi, Thiruvarangathu Anthathi, Thiruvenkadathu Anthathi, Azhagar Anthathi, Nootrettuthirupathi Anthathi.

**ஆய்வுச் சுருக்கம்**

உலகை இயக்கும் ஆதிசிவனால் வளர்த்தெடுக்கப்பட்ட மொழி நம் தாய் மொழியாகிய தமிழ். எனவே தான் தெய்வ மொழியாக விளங்குகிறது. மேலும் ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுமைக்கும் கற்றுத் தீராத வண்ணம் இலக்கண வடிவத்தை கொண்ட மொழியாகும். அத்தகைய இலக்கண வடிவம் தமிழ் இலக்கியத்தினால் உயிர் பெற்றது. அதன்படி பாடப்படும் இலக்கியங்கள் இறைவன் மீது பக்தி கொண்டு இதயம் கனிந்து பாடும் அடியவர்களினால் அழகு பெற்று மிளிர்கிறது. தமிழின் சிற்றிலக்கிய செய்யுள் வகையில் ஒன்றாகிய அந்தாதி வடிவினைக் கொண்டு கார்மேக வண்ணனாகிய திருமாலால் ஆட்கொள்ளப்பட்ட வைணவ அடியார்களில் ஒருவராகிய பிள்ளை பெருமாள் ஐயங்கார், தமிழ் மொழியின் அந்தாதி செய்யுள் வடிவையும் திருமாலின் வடிவழகையும் ஒருசேரக் கொண்டு பாடிய படைப்புகளை ஆராய்வதை இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

பிள்ளை பெருமாள் ஐயங்கார், வைணவம், அந்தாதி, திருவரங்கத்து அந்தாதி, திருவேங்கடத்து அந்தாதி,அழகர் அந்தாதி ,நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி.

**முன்னுரை**

தேனின் சுவையையும் தென்றலின் இனிமையையும் போன்று படிப்பதிலும் உணர்வதிலும் மனதை மயக்கும் மொழி தமிழ். அதற்கு அழகு சேர்க்கும் வகையில் இலக்கியங்களை படைத்து தந்தவர்களில் இறைவன் மீது பக்தி கொண்ட அடியார்கள் மிக முக்கிய பங்கை வகிப்பர். காரைக்கால் அம்மையார் தமிழ் உலகிற்கு தந்த கொடை அந்தாதி. அச்செய்யுள் வடிவில் வைணவ அடியாராகிய பிள்ளை பெருமாள் ஐயங்கார் திருமால் மீது பாடிய பாடல்கள் குறித்து இவ்வாய்வுக் கட்டுரையில் அறியலாம்.

**பிள்ளை பெருமாள் ஐயங்கார்**

சோழநாட்டில் திருமங்கை எனும் பகுதியில் தோன்றியவர். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர்களுள் ஒருவர். கி.பி 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஒரு அலுவலராக பணிபுரிந்து வாழ்ந்தார். அதன் பின்னர் தன் வாழ்வை முழுவதுமாக திருமால் பக்தியில் ஈடுபடுத்தினார். திவ்யக்கவி என்றும் அழகிய மணவாளதாசர் எனவும் அழைக்கப்பட்டார். தன் வாழ்நாளில் பெரும் பகுதியை திருவரங்கத்திலேயே கழித்து அப்பெருமான் மீது அதீத பக்தியை கொண்டவராக திகழ்ந்தார். **“வைணவ நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர் என்பதும் சம்பிரதாயங்களை தெளிவாக அறிந்தவர் என்பதும் அவருடைய நூல்களால் புலனாகின்றது”.(பக்.172 நா.சுப்புரெட்டியார்)**

மேலும் இவர் தமிழ் மற்றும் வடமொழிகளிலும் புலமைப்பற்றவராக திகழ்ந்தார். தமிழின் சிற்றிலக்கிய வகைகளான கலம்பகம், மாலை, ஊசல், தூது, அந்தாதி வடிவில் நூல்களைப் படைத்துள்ளார். அஷ்ட பிரபந்தம் என்ற எட்டு நூல்களைத் தவிர திருநறையூர் நம்பி மேகவிடு தூது என்ற நூலையும் பாடியுள்ளார்.

**அஷ்டப்பிரபந்தம்**

'அஷ்டம்' என்றால் எட்டு என்று பொருள். இது ஒரு முழுமையான வைணவ நூலாகும். திவ்ய பிரபந்தத்தின் சாரத்தைக் கொண்டு எட்டு நூல்கள் அடங்கியுள்ளதால் இதற்கு அஷ்டப்பிரபந்தம் என்று பெயர்.

**“அஷ்டப்பிரபந்தம் என்று திட்டமிட்டு எழுதப்பட்ட நூலன்று இது” (பக்.6-அஷ்டப்பிரபந்தம்)** பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பெருமாள் மீது கொண்ட காதலால் தனித்தனியாக பாடியவை அவற்றை இணைத்து அஷ்டப்பிரபந்தம் ஆக்கினர். இதற்கு திருவல்லிக்கேணி வை.மு.சடபோபராமாநுசாரியார், சே. கிருட்டிணமாச்சாரியார், வை. மு. கோபாலகிருட்டிணமாச்சாரியார் ஆகிய மூவரால் 50 ஆண்டுகளுக்கு முன் தனித்தனி நூலாக வெளியிடப்பட்டது. பிறகு 1955இல் அருஞ்சொற்பொருளுடன் வித்வான் மே.வி. வேணுகோபாலப்பிள்ளை வெளியிட்டார்.மர்ரே எஸ்.இராஜம் 1957-இல் தெளிவான மூலப் பதிப்பை வெளியிட்டார். அதன் பின் வெகு காலத்திற்குப் பிறகு டாக்டர் எஸ் ஜெகத்ரட்சகன் அவர்கள் 1994 இல் தெளிவுரை எழுதி தமிழ் உலகிற்கு வழங்கினார். அப்பிரதியை புதுப்பித்து 2009இல் இரண்டாம் பதிப்பாகவும் வழங்கியுள்ளார். இன்றளவும் தமிழறிஞர்களால் பெரிதும் பேசப்படாத ஒரு அரிய நூலாகவே இது காணப்படுகிறது. 'அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரை பண்டிதன்' என்பது பழமொழி.

இந்நூலில்திருஅரங்கக் கலம்பகம், திருஅரங்கத்து மாலை, திருஅரங்கத்து அந்தாதி, சீரங்க நாயகர் ஊசல், திருவேங்கட மாலை, திருவேங்கடத்து அந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி ஆகிய எட்டு சிற்றிலக்கிய நூல்கள் அடங்கியுள்ளன. இதனுள் வடவேங்கடம், தென்திருவரங்கம், அழகர் மலை, 108 திருப்பதிகளை எல்லையாகக் கொண்டு ஆதிஅந்தம் இல்லாத பரம்பொருளை அந்தம் ஆதியாக துவங்கும்

அந்தாதி செய்யுள் வடிவில் உள்ளம் உருகி பாடுகிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். அவையாவன

திருவரங்கத்து அந்தாதி
திருவேங்கடத்து அந்தாதி
அழகர் அந்தாதி
நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி

என்பனவாகும். இவற்றுள் நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி தவிர ஒவ்வொன்றும் தலா 100 பாடல்கள் வீதம் அமைந்துள்ளது.

**திரு அரங்கத்து அந்தாதி**

பூலோக வைகுண்டம் என்றும் வைணவர்களின் முதல் திவ்யதேசமாகவும் விளங்குவது ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கம்.

**"சுரும்பு அமர் சோலை சூழ்ந்த அரங்க மா கோயில் கொண்ட**
**கரும்பினைக் கண்டுகொண்டு, என் கண்ணிணை களிக்குமாறே!"**

**(திருமாலை- 888)**

என தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்க சிறப்பை பாடுகிறார்.
தென்றல் தவழும் குடகில் உருவாகி செல்லும் வழியெல்லாம் பசுமையை வழங்கும் காவிரியின் கொள்ளிடம் சூழ்ந்த திருத்தலம் திருவரங்கம். திருமகள் மார்பன் பள்ளிகொண்ட கோலத்தில் காட்சியருளும் அழகையும், இத்தலத்தின் வளமையையும், சிறப்பையும் பற்றி மட்டுமே பாடுகிறது திருவரங்கத்து அந்தாதி.

பிள்ளை பெருமாள் ஐயங்காரினுடைய மனம், மொழி, மெய் மூன்றும் அரங்கநாதனிடம் சரணடைந்ததை இதில் உள்ள பாசுரங்கள் விவரிக்கின்றன. திவ்ய தேச பெருமையைப் பாடுகையில், குளிர்ந்த காவிரி ஆறும், கயல் மீன்களும், உயர்ந்த மதில்களைக் கொண்ட திருவரங்கம் என

**" தண் அரங்கத்**
**தான், அந்தி ஆகப் பகல் மறைத்தான்"** **(திரு அரங். பா- 78)**

**"மால் நாக அரும்பு அலர் சோலை**
**சூழும் மதில் அரங்கா!"** **(திருஅரங். பா- 86)**

இப்பாடல்களில் பகர்கிறார். உயர்ந்த கோபுரத்தையும், ஏழடுக்கு கோயிலும், நிலவின் ஒளியானது மிளிரும் குளத்தையும் கொண்ட திருத்தல அமைப்பைச் சுட்டி காட்டுகிறார்.

**"கனக வி மான், அம்ஸபுவிமான்**
**தடவரைக் கண்வளரும்**
**கனக விமானத்து அரங்கனை"** **(திருஅரங். பா-67)**

காவிரியில் தீர்த்தமாடி உலகிற்கு தலைவனான திருவரங்கனின் திருநாமங்களைக் கூறியும், திருவடியில் சரணடைந்து அடிமைத்தொண்டு புரிந்ததும், அவன் மீது கொண்ட காதலையும், திருமால் அடியவர்களிடம் கொண்ட பக்தி என அவருடைய பக்தி நெறியினை

**" அமுதாற்றில் படிந்து,**
**ஆங்கு ஆர் அமான் அடி காண்பேன்- அவன் தன்"(திருஅரங். பா-98)**

**"செய்ய வளைக்கும் சிலம்பு அணி பாதங்கள்**

**சேர்ந்தனமே"** **(திருஅரங். பா-2)**

**"மண், இ வாசகம் கொண்டு, அணிவார்**

**அடியை வணங்கினரே"** **(திருஅரங். பா-72)**

இத்தகைய பாடல்கள் வெளிப்படுத்துகிறது.

**திருவேங்கடத்து அந்தாதி**

உலகில் திருமால் மீது பக்தி கொண்டவர்கள் ஒருமுறையேனும் செல்ல நினைக்கும் இயற்கை எழில் கொஞ்சும் 'காடுறை மாயோன்' வாழும் திருமலை எனும் திருப்பதி.'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும்' நல் உலகின் எல்லையாக கருதப்படும் திருவேங்கடத்தை பாடாத வைணவ அடியார்கள் இல்லை. அத்தனை சிறப்புப் பெற்ற திவ்ய தேசத்தின் அழகானது மனதை அங்கேயே நிலைநிறுத்தும். இக்கருத்தை, குலசேகராழ்வாரின்

**"பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்**

**செண்பகமாய் நிற்கும் திரு உடையேன் ஆவேனே"( பெருமாள்.திரு-680)**

என்ற வரிகள் பறைசாற்றும்.

கார் முகில்கள் தவழ்ந்தும்,வண்டுகள் இந்தளம் என்ற பண்ணைப்பாடியும், செண்பக மலரின் மகரந்தத்தையும் மலர்களையும் தாங்கி வரும் அருவிகளும், குரங்குகள் கொஞ்சி விளையாடும் சோலைகளையும் பெற்றது என நூல் முழுவதும் வேங்கடநாதனோடு திருவேங்கட மலையினையும் ஆசிரியர் பாடுகிறார். இதற்கு நாகமலை, பாம்பு மலை ஆகிய வேறு பெயர்களும் உள்ளது.

**" கொண்டல் தண்டலைமேல்**

**ஊர்ந்து கவிக்கும் வடமலையாய்!"** **(திருவேங்-7)**

**"ஆதார! இந்த இடம் தேன் பாடும் வேங்கடத்து"** **(திருவேங்-18)**

**"ஒரு மாது அவா விருந்தா! வனக் கா**

**உயர் வேங்கடத்து எம்"** **(திருவேங்-54)**

மேலும் எட்டெழுத்து மந்திரமான நாராயண நாமத்தின் சிறப்பையும், ரிக் வேதத்தில் உரைக்கப்பட்ட வேத முதல்வனையும், திருமண் காப்பிடும் வழக்கத்தையும்,

**"எழுத்து எட்டினால் எண்ணி ஏத்தீர்**

**பரகதி ஏறுதற்கே"** **(திருவேங்-67)**

**"நேர் அவரும் புண்டரர்க்கு அருள்வான்"** **(திருவேங்-6)**

என்ற பாடல்களில் உரைக்கிறார். அகத்திணை சார்ந்த குறிப்புகள் அதாவது திருமாலிடம் காதல் கொண்ட பெண் மாலை பொழுதில் காதல் நோயால் உடல் மெலிவுற்றாள் என அகப்பொருள் கொண்டு திருமாலின் மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்துகிறார்.

**"பிறை மாலையால் ஒரு பேதை நைந்தாள்;**

**அந்த பேதைக்கு நின்**

**நறை மாலை தா! என்று மானிடம்"** **(திருவேங்-55)**

வைணவத்தில் திருமாலை தலைவனாகவும் தன்னை தலைவியாகவும் கொண்டு நாயக-நாயகி பாவத்தில் ஆழ்வார்கள் முதல் அடியவர்கள் வரை சரணாகதி அடைவது வைணவ நெறியின் அம்சமாகும். அதனையே இப்பாடல் பறை சாற்றுகிறது. உதாரணமாக,

**“பெயர்த்தும் கண்ணா! என்று பேசும் ;**

**பெருமானே, வா! என்று கூவும்;**
**மயல் பெருங் காதல் என் பேதைக்கு**
**என்செய்கேன் வல்வினையேனே?” (திருவாய்-3273)**

என நம்மாழ்வார் திருவாய் மொழியில் பல்வேறு பாசுரங்களை நாயக- நாயகி பாவத்தில் வடித்துள்ளார்.

**அழகர் அந்தாதி**

திருமாலின் திவ்ய தேசங்கள் அனைத்தும் தனிச்சிறப்பையும் புகழையும் உடையது. என சங்க இலக்கியத்தால் புகழப்படும் பழமை வாய்ந்த திருத்தலம் திருமாலிருஞ் சோலைமலை என்ற திருமாலிருங்குன்றம். திவ்ய மங்கள ரூபனான திருமால், அழகர் என்ற பெயருடன் கோவில் கொண்டதால் அழகர் மலை என்ற பெயரும் பெற்றது.

**“அலைவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை ;**
**குல மலை கோல மலை குளிர் மா மலை கொற்ற மலை**
**நில மலை நீண்ட மலை திருமாலிருஞ் சோலையதே” (பெரியாழ்.திரு-353)**

அழகரையும், அழகர் மலையையும் அழகுறப் பாடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. எருதுமலை, காளை மலை என்றும் மழைப் பொழிவைக் கொண்டதும், யானைகள் நிறைந்ததும், மேரு மலையாகவும், உயர்ந்த மலையானதால் நிலவின் தழுவலைப் பெற்றும் மிகுந்த வனப்புடன் காணப்படும் மலையினை,

**“ விடைவெற்பில் நின்ற**
**நாதா! கபந்தனைச் செற்றாய்!உனை” (அழ.அந்-42)**
**“திண் திறக் குஞ்சரம் சேர் சோலை**
**மாமலைச் சீதரனே!” (அழ.அந்-80)**

என்று பல்வேறு பாடல்களில் குறிப்பிடுகிறார். மேலும் மயில்கள், கிளிகள் கொஞ்சி விளையாடும் சோலைகளையும், செழிப்பு பெற்ற தாமரை மலர்கள் கொண்ட தடாகங்களும், வளமான மரங்களும் நிரம்பப் பெற்ற மலை என்று அதனுடைய அழகை விவரிக்கிறார் ஆசிரியர். இத்தகைய மலையின் மீது நின்றருள் புரியும் அழகரினையும் பாதாதி கேசமாக வடிவழகை வர்ணித்துள்ளார்.

செந்தாமரை போன்ற திருவடியும், கருமேகம் போன்ற மேனியும், திருத்துழாய் மாலை அணிந்த மார்பும், பொன்னாடையணிந்த திருவரையும் என காண்பவர் நெஞ்சத்தை ஈர்க்கும் அழகுடன் பெருமாள் காட்சியளிப்பதை,

**“ திருமங்கை கொங்கை**
**துன்று அபிராமனை, சுந்தரத் தோளனை” (அழ.அந்-6)**
**“ திருமால் அழகர்,**

**கஞ்ச முருக்கு மலர்வாய்த் திரு நண்பர்"** **(அழ.அந்-13)**

**"காவலன், பாற்கடல் கண்துயில் மால்**

**அலங்காரன் என்றே"** **(அழ.அந்-25)**

இப்பாடல்களில் பகர்கிறார்.

**நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி**

நம் கலாச்சாரத்தில் புனித தலங்களுக்கு சென்று வழிபடுதல் அல்லது தீர்த்த யாத்திரை என்பது பழங்காலம் தொட்டு வழக்கத்தில் உள்ளது. அவ்வாறு பன்னிரு ஆழ்வார்களும் திருமால் கோவில் கொண்ட திருப்பதிகள் அனைத்தையும் சேவிக்க இயலாவிட்டாலும் பாரத தேசத்தில் குறிப்பிட்ட 106 திவ்ய தேசங்களுக்கு சென்று வழிபட வேண்டும் என்று மங்களாசாசனம் செய்து வைத்ததே நூற்றெட்டுத்திருப்பதிகள். இதனைப் பாடுவதே நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி ஆகும். ஏனைய அந்தாதி நூல்கள் நூறு பாடல்கள் கொண்டிருப்பதைப் போல் அல்லாமல் நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுக்கும் ஒரு பாடல் வீதம் 108 பாடல்கள் அமையப்பெற்றுள்ளது. இவற்றில் 106 தலங்கள் மட்டுமே புவியில் உள்ளது. மற்ற இரண்டும் திருப்பாற்கடலும் திருவைகுண்டமும் ஆகும். நம் தேசத்தில் உள்ள 106 திருப்பதிகளுக்கும் சென்று தரிசனம் செய்தால் திருநாடு எனப்படும் வைகுண்டத்திற்கு செல்வர். அதாவது வீடுபேற்றைப் பெறுவர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், முதல் திவ்ய தேசமாக விளங்கும் திருவரங்கம் முதல் திருவைகுண்டம் வரை தன் பாடல்கள் மூலமாக வணங்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

**முடிவுரை**

வைணவ அடியாராக திகழ்ந்த அழகிய மணவாள தாசர், தமிழில் மீது கொண்ட அதீத பற்றையும் திருமாலிடம் வைத்துள்ள காதலையும் கூறுவதாக தன் படைப்புகளைப் படைத்துள்ளார். மேலும் இவர் பாடிய அந்தாதி நூல்கள் நான்கும் திவ்ய தேச சிறப்பையும், திருமாலின் சீலகுணத்தையும், வைணவ வழிபாட்டு நெறிகளையும் ,அவருடைய பக்தி நெறியையும் விளக்குவதாகவும் உள்ளன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. கோவிந்தன் .த, நாலாயிர திவ்ய பிரபந்தம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை- 14, மூன்றாம் பதிப்பு -ஜுன் 2021.
2. சுப்பு ரெட்டியார்.ந, வைணவமும் தமிழும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை 600018,முதல் பதிப்பு 1998
3. மதி சீனிவாசன் உ.வே, நாலாயிர திவ்ய பிரபந்தம் பகுதி1 மற்றும்2 ,ஸ்ரீ வராகி பிரிண்டர்ஸ்,144 ,ஆழ்வார்பேட்டை, சென்னை 600018, பதிப்பு -2000.
4. மதி சீவாசன் உ.வே, நாலாயிர திவ்ய பிரபந்தம் பகுதி 3 மற்றும் 4 - ஸ்ரீ வாராகி பிரிண்டர்ஸ்ஆழ்வார்பேட்டை சென்னை 600018 பதிப்பு 2000.

**ISSN: 2320-4842**
**Vol-18 No. 04 October–December 2024**

5. ஜெகத்ரட்சகன். எஸ் ,அஷ்டப்பிரபந்தம், ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை-600 017, இரண்டாம் பதிப்பு -2009.